**சுருக்கம்**

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை – கல்வி – பள்ளிகள் – தஞ்சாவூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் உள்ள அரசு ஆதிதிராவிடர் நல தொடக்கப் பள்ளிகளில் உள்ள பழுதடைந்த கட்டடங்களை இடித்து விட்டு 14 கூடுதல் வகுப்பறைக் கட்டடங்கள் ரூ. 2,08,16,851 /- மதிப்பீட்டில் கட்டுதல் – நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒப்பளிப்பு – ஆணை வெளியிடப்படுகிறது.**

---

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந–2) துறை**

அரசாணை (நிலை) எண்:13

**நாள் : 18.02.2019**
விளம்பி வருடம்
மாசி திங்கள் 6–ஆம் நாள்
திருவள்ளுவர் ஆண்டு 2050

படிக்கப்பட்டது:–

ஆதிதிராவிடர் நல இயக்குநரின் கடித ந.க. எண். க.4/17700/2018, நாள். 24.09.2018.

-----

**ஆணை:**

மேலே படிக்கப்பட்ட கடிதத்தில், ஆதிதிராவிடர் நலத்துறையின் கீழ் இயங்கும் 30 வருடத்திற்கும் மேலாக பழுதடைந்து இடிந்துவிழும் நிலையில் உள்ள கட்டடங்களை இடித்துவிட்டு புதிய கட்டடங்கள் கட்டுவதற்கான விவரங்கள் அடங்கிய மதிப்பீட்டு அறிக்கையுடன் கூடிய கருத்துருவினை சமர்ப்பிக்குமாறு மாண்புமிகு அமைச்சர் (ஆதி(ம)பந) அவர்களால் அறிவுறுத்தியதற்கிணங்க, தஞ்சாவூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் இயங்கி வரும் 5 அரசு ஆதிதிராவிடர் நல தொடக்கப் பள்ளிகளில் உள்ள பழமையான கட்டடங்களை இடித்துவிட்டு, அப்பள்ளிகளுக்கு 14 கூடுதல் வகுப்பறைக் கட்டடங்கள் ரூ.235.00 இலட்சம் செலவில் கட்டுவதற்கு, தாட்கோ மேலாண்மை இயக்குநரிடமிருந்து பெறப்பட்ட முன்மொழிவுகள் மற்றும் மதிப்பீட்டு அறிக்கைகள் குறித்த விவரங்களை சமர்ப்பித்து நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீடு செய்து ஆணை வெளியிடுமாறு ஆதிதிராவிடர் நல இயக்குநர் அரசைக் கோரியுள்ளார்.

2. ஆதி திராவிடர் நல இயக்குநரின் மேற்காணும் கருத்துருவினை அரசு கவனமுடன் ஆய்வு செய்தது. ஆய்வுக்குப் பின்னர், தாட்கோ மேலாண்மை இயக்குநரிடமிருந்து பெறப்பட்டுள்ள மதிப்பீட்டறிக்கையில் உள்ள Civil Works–இன் மொத்த மதிப்பீட்டில் Provision for Contingencies Items-இக்கான செலவினை 1% ஆக கட்டுப்படுத்தியும், Provision for unforeseen items-ஐ முழுவதுமாக குறைத்தும், Provision for Labour Welfare Fund–ஐ மொத்த மதிப்பீட்டில் 1 % ஆக மதிப்பிட்டும், Administrative Charges–ஐ 12.5 % ஆக மதிப்பிட்டும், பழுதடைந்துள்ள பழைய வகுப்பறைக் கட்டடங்களை இடிப்பதற்கான செலவினத்தை முழுவதுமாகக் குறைத்தும், அதற்கேற்றாற்போல் கீழே உள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, தஞ்சாவூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களிலுள்ள அரசு

(த.பி.பா.)

ஆதிதிராவிடர் நல தொடக்கப் பள்ளிகளில் மிகவும் பழுதடைந்து இடிந்து விழும் நிலையிலுள்ள வகுப்பறைக் கட்டடங்களை இடித்துவிட்டு **ரூ. 2,08,16,851 /- (ரூபாய் இரண்டு கோடியே எட்டு இலட்சத்து பதினாறாயிரத்து எண்ணூற்று ஐம்பத்து ஒன்று மட்டும்)** மதிப்பீட்டில் 14 புதிய வகுப்பறைக் கட்டடங்கள் கட்டுவதற்கு, ஆதிதிராவிடர் நல இயக்குநருக்கு நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒப்புதல் வழங்கியும் அரசு ஆணையிடுகிறது:-

| **வ. எண்.** | **விடுதியின் பெயர் மற்றும் மாவட்டம்** | **ஒதுக்கீடு செய்யப்படும் தொகை (ரூ. இலட்சத்தில்)** |
|---|---|---|
| 1. | ஆதிதிராவிடர் நல தொடக்கப்பள்ளி,<br>திருமலைராஜபுரம்<br>தஞ்சாவூர் மாவட்டம்<br>(2 வகுப்பறைக் கட்டடங்கள்) | 29.42 |
| 2. | ஆதிதிராவிடர் நல தொடக்கப்பள்ளி,<br>நாஞ்சிக் கோட்டை,<br>தஞ்சாவூர் மாவட்டம்<br>(2 வகுப்பறைக் கட்டடங்கள்) | 28.80 |
| 3. | ஆதிதிராவிடர் நல தொடக்கப்பள்ளி,<br>குறுக்காலயப்பட்டி,<br>புதுக்கோட்டை மாவட்டம்<br>(2 வகுப்பறைக் கட்டடங்கள்) | 28.36 |
| 4. | ஆதிதிராவிடர் நல தொடக்கப்பள்ளி,<br>சின்னகாங்கேயம்பட்டி,<br>தஞ்சாவூர் மாவட்டம்<br>(4 வகுப்பறைக் கட்டடங்கள்) | 60.79 |
| 5. | ஆதிதிராவிடர் நல தொடக்கப்பள்ளி,<br>சோழகம்பட்டி,<br>தஞ்சாவூர் மாவட்டம்<br>(4 வகுப்பறைக் கட்டடங்கள்) | 60.80 |
| **மொத்தம்** | | **208.17** |

3. மேலே பத்தி 2–இல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள பணிக்கான செலவினங்கள் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும் :–

" 4225 - ஆதிதிராவிடர், பழங்குடியினர் , ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் மற்றும் சிறுபான்மையினர் நலன் குறித்த மூலதனச் செலவு 01 ஆதி திராவிடர் நலன் 277 கல்வி மாநிலச் செலவினங்கள் JB ஆதி திராவிடர் நலப் பள்ளிக் கட்டடங்கள் கட்டுதல் 16 பெரும்பணிகள்
(த.தொ.கு. 4225 01 277 JB 1601) "

(த.பி. பா.)

4. மேலே குறிப்பிடப்பட்டுள்ள கட்டுமானப் பணி, தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ), சென்னை, நிறுவனத்தால் உரிய ஒப்பந்தப்புள்ளி விதிமுறைகளைப் பின்பற்றி மேற்கொள்ளப்பட வேண்டும்.

5. மேலே பத்தி 2-இல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள கட்டுமானப் பணி தாட்கோ மூலம் செயல்படுத்தப்பட வேண்டும். மேலும், இத்தொகையினைப் பெற்று தாட்கோ நிறுவனத்திற்கு பணமாக வழங்காமல், தாட்கோ நிறுவனத்தின் கீழ்க்காணும் அலுவலர் பெயர் வைப்புத் தொகை கணக்குத் தலைப்பில் காசோலை / வரைவோலை மூலம் எதிர் வரவாக (Contra credit) வரவு வைப்பதற்கு ஆதிதிராவிடர் நல இயக்குநருக்கு அனுமதி அளித்து அதிகாரம் வழங்கப்படுகிறது:-

"K வைப்புத்தொகைகள் மற்றும் முன்பணங்கள் (b) வட்டியில்லா வைப்புத் தொகைகள் 8443-00- உரிமையியல் வைப்புத் தொகைகள் 800 பிற வைப்புத்தொகைகள் - BY தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வளர்ச்சி கழக வைப்புத்தொகைகள் - தாட்கோவின் வைப்புத் தொகைகள்,

(த.தொ.கு. 8443 00 800 BY 000G) (Receipt)

(த.தொ.கு 8443 00 800 BY 0004) (Outgo)".

6. கட்டுமானப் பணிகளை குறித்த காலக்கெடுவுக்குள் கட்டிமுடிக்க கால அட்டவணை ஒன்றினை மேலாண்மை இயக்குநர் தாட்கோவுடன் கலந்தாலோசித்து தயார் செய்யும்படி ஆதிதிராவிடர் நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். கட்டட கட்டுமானப் பணி முன்னேற்றத்தினை கண்காணிக்கவும், குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் கட்டடங்கள் கட்டிமுடித்து ஆதிதிராவிடர் நலத்துறையிடம் தாட்கோ ஒப்படைப்பதை உறுதிப்படுத்திக் கொள்ளும்படியும், ஆதிதிராவிடர் நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். இது தொடர்பான பணி முன்னேற்ற அறிக்கையை அரசுக்கு அனுப்புமாறும், கட்டுமானப்பணியின் விரைவு மற்றும் அதன் தரத்தினை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறும் தாட்கோ, மேலாண்மை இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. இவ்வாணை நிதித் துறையின் அலுவல் சாரா குறிப்பு எண்.7417/ஆதி(ம)பந/2019, நாள்.18.02.2019-இல் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**ஒட்டெம் டாய்**
**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்**

__பெறுநர்:__

ஆதிதிராவிடர் நல இயக்குநர், சென்னை - 600 005.
மேலாண்மை இயக்குநர், தாட்கோ, சென்னை -600 018.
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை -600 006/18/35.
சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை - 600 008.
மாவட்ட ஆட்சியர், தஞ்சாவூர், புதுக்கோட்டை
மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர், தஞ்சாவூர், புதுக்கோட்டை
மாவட்ட கருவூல அலுவலர், தஞ்சாவூர், புதுக்கோட்டை

(த.பி. பா.)

**நகல்:**

மாண்புமிகு அமைச்சர், (ஆதி(ம)பந) அவர்களின் முதுநிலை சிறப்பு
நேர்முக உதவியாளர், சென்னை -600 009.
நிதி(ஆதி(ம)பந)துறை, சென்னை -600 009.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை கூடுதல் தலைமைச்
செயலாளரின் முதுநிலை தனிச் செயலர், சென்னை -600 009.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(அநமு.1/ஆதிந.4/ ஆதிந.5 ) துறை,
சென்னை -600 009.
இருப்புக்கோப்பு /உதிரி நகல்

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

**பிரிவு அலுவலர்**